முதன்மை அமர்வு நீதிமன்றம், சிவகங்கை

முன்னிலை: **திருமதி.K.அறிவொளி**, **M.A.,M.L.,**

முதன்மை அமர்வு நீதிபதி, சிவகங்கை.

2026-ம் வருடம் மார்ச் மாதம் 12-ம் நாள் வியாழக்கிழமை

**சிறப்பு அமர்வு வழக்கு எண்:56/2024** *(CNR No.TNSV01003539/2024)*

மற்றும்

**சிறப்பு அமர்வு வழக்கு எண்:57/2024** *(CNR No.TNSV01003540/2024)*

*****

**சிறப்பு அமர்வு வழக்கு எண்:56/2024:**

(நீதித்துறை நடுவர் நீதிமன்றம், மானாமதுரை ஆண்டு பட்டிகை வழக்கு எண்.65/2024, சிப்காட் காவல்நிலைய குற்ற எண்.216/2020)

**சிறப்பு அமர்வு வழக்கு எண்:57/2024:**

(நீதித்துறை நடுவர் நீதிமன்றம், மானாமதுரை முதல் நிலை பதிவேட்டு வழக்கு எண்.11/2024, சிப்காட் காவல்நிலைய குற்ற எண்.216/2020)

தமிழ்நாடு அரசுக்காக காவல் ஆய்வாளர்,
சிப்காட் காவல்நிலைய குற்ற எண்.216/2020 . . . குற்ற முறையிடுபவர்

/எதிரிடை/

பிரபாகரன், த/பெ.ஆறுமுகம்,
நத்தபுறக்கி,
மானாமதுரை தாலுகா,
சிவகங்கை. . . . எதிரி

| | | |
|---|---|---|
| குற்றம் முறையிடுபவர் | : | தமிழ்நாடு அரசுக்காக காவல் ஆய்வாளர்,<br>சிப்காட் காவல்நிலைய குற்ற எண்.216/2020 |
| குற்றம் சாட்டப்பட்டவர் | : | பிரபாகரன், த/பெ.ஆறுமுகம்,<br>நத்தபுறக்கி,<br>மானாமதுரை தாலுகா,<br>சிவகங்கை. |
| குற்றம் முறையிடப்பட்டது | : | எதிரி மீது இதச பிரிவு 379 மற்றும் 21(4) of Mines and Minerals (Development and Regulation) Act, 1957-ன் கீழும். |
| சிறப்பு அமர்வு வழக்கு | : | எதிரி மீது *379 IPC*-ன் கீழ் குற்றச்சாட்டு |

KANNAYEERAM ARIVOLI Digitally signed by KANNAYEERAM ARIVOLI Date: 2026.03.12 17:34:42 +0530

| | | |
|---|---|---|
| எண்:56/2024 வழக்கின் எதிரி மீது வனையப்பட்ட குற்றச்சாட்டு. | | வனையப்பட்டுள்ளது. |
| சிறப்பு அமர்வு வழக்கு எண்:57/2024 வழக்கின் எதிரி மீது வனையப்பட்ட குற்றச்சாட்டு. | : | எதிரி மீது Section 21(4) of Mines and Minerals (Development and Regulation) Act, 1957-ன் கீழ் குற்றச்சாட்டு வனையப்பட்டுள்ளது. |
| எதிரியின் வாதுரை | : | குற்றவாளி இல்லை. |
| சிறப்பு அமர்வு வழக்கு எண்:56/2024 வழக்கின் தீர்மானம் | : | ***முடிவில்,*** எதிரி இதச பிரிவு *379*-ன் கீழ் குற்றவாளி இல்லை என தீர்மானித்து கு.வி.மு.ச. பிரிவு 235(1)-ன் கீழ் விடுதலை செய்து தீர்ப்பளிக்கப்படுகிறது. |
| சிறப்பு அமர்வு வழக்கு எண்:57/2024 வழக்கின் தீர்மானம் | : | ***முடிவில்,*** எதிரி 21(4) of Mines and Minerals (Development and Regulation) Act, 1957 IPC-ன் கீழ் குற்றவாளி இல்லை என தீர்மானித்து கு.வி.மு.ச. பிரிவு 235(1)-ன் கீழ் விடுதலை செய்து தீர்ப்பளிக்கப்படுகிறது. |

நீதித்துறை நடுவர், மானாமதுரை முன்னிலையில் ஆண்டு பட்டிகை வழக்கு எண்.65/2024 மற்றும் முதல்நிலை பதிவேட்டு வழக்கு எண்.11/2024 என்று கோப்பில் எடுக்கப்பட்டு கு.வி.மு.ச 209 பிரிவின் கீழ் மேல் விசாரணைக்கு அனுப்பப்பட்டு இந்நீதிமன்றத்தில் 10.03.2026-ம் தேதியன்று இறுதி விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்பட்டும், அரசு தரப்பில் அரசு குற்றத்துறை வழக்கறிஞர் திரு.*A*.அழகர்சாமி அவர்கள் முன்னிலையாகியும், எதிரி தரப்பில் இலவச சட்ட உதவி ஆணைக் குழுவிலிருந்து நியமிக்கப்பட்ட கற்றறிந்த வழக்கறிஞர் திரு.K.முருகன் அவர்கள் முன்னிலையாகியும், இரு தரப்பு வாதங்கள் கேட்கப்பட்டும், முன்னிலைப்படுத்தப்பட்ட ஆவணங்கள் பரிசீலனை செய்யப்பட்டும், இதுநாள் வரை இந்நீதிமன்றத்தின் பரிசீலனையிலிருந்தும் இன்று இந்நீதிமன்றம் கீழ்க்கண்டவாறு வழங்கும் . . .

KANNAYEERAM ARIVOLI
Digitally signed by KANNAYEERAM ARIVOLI
Date: 2026.03.12 17:34:51 +0530

12.03.2026

முதன்மை அமர்வு நீதிபதி, சிவகங்கை

**பொ து வா ன - தீர் ப் பு ரை-**

கடந்த 24.08.2020-ம் தேதி காலை 9.00 மணிக்கு சாட்சி-1 தனசேகர் மற்றும தலைமைக் காவலரான சாட்சி-2 கணேசன் என்பவரும் Hello Police-48 அலுவலாக சிப்காட் காவல் சரகம் பகுதிகளில் ரோந்து சுற்றி வந்தபோது செய்களத்தூர் சின்னக்கண்மாய் அய்யனார் கோவில் அருகே TN 63 L 0067 என்ற பதிவெண் கொண்ட டிராக்டரில் அதனுடன் இணைந்த TN 63 L 1883 என்ற பதிவெண் கொண்ட டிரெய்லரில் எதிரி எவ்வித அரசு அனுமதியுமின்றி சுயலாப நோக்கம் கருதி திருட்டுத்தனமாக சுமார் ஒரு யூனிட் சவடு மண்ணை அள்ளி வந்துள்ளார் என்றும், எனவே எதிரி 21(4) of Mines and Minerals (Development and Regulation) Act, 1957 r/w 379 IPC-ன் கீழ் தண்டிக்கத்தக்கவர் என்று சிப்காட் காவல்நிலைய காவல் ஆய்வாளர் குற்ற இறுதி அறிக்கை தாக்கல் செய்துள்ளார்.

**2)** எதிரி, கற்றறிந்த மாவட்ட உரிமையியல் மற்றும் நீதித்துறை நடுவர் சிங்கம்புணரி அவர்கள் முன்பாக முன்னிலையான போது, எதிரிக்கு வழக்கு ஆவணங்களின் நகல்கள் கு.வி.மு.ச. பிரிவு 207-ன் கீழ் இலவசமாக வழங்கப்பட்டும், எதிரி மீதான குற்றம் சிவகங்கை மாவட்ட அமர்வு நீதிமன்றத்தால் மட்டுமே விசாரிக்கப்படத்தக்கது என்பதால் கு.வி.மு.ச. பிரிவு 209-ன் கீழ் வழக்குக் கோப்பு இந்நீதிமன்றத்தில் விசாரணைக்காக சமர்ப்பிக்கப்பட்டுள்ளது.

**3)** எதிரி இந்நீதிமன்றத்தில் முன்னிலையானபோது சிறப்பு அமர்வு வழக்கு எண்:56/2024 வழக்கில் உள்ள எதிரி மீது சுமத்தப்பட்ட 379 IPC-ன் கீழும் மற்றும் சிறப்பு அமர்வு வழக்கு எண்:57/2024 வழக்கில் உள்ள எதிரி மீது சுமத்தப்பட்ட 21(4) of Mines and Minerals (Development and Regulation) Act, 1957 IPC-ன் கீழும் குற்றங்களை புரிந்திருக்கக்கூடும் என்று அனுமானிக்கத்தக்க

காரணம் இருக்கின்றது என்று முடிவு செய்து, கடந்த 19.08.2025 அன்று எதிரி மீது 21(4) of Mines and Minerals (Development and Regulation) Act, 1957 r/w 379 IPC-ன் கீழான குற்றங்களைப் பற்றி எழுத்து மூலமான குற்றச்சாட்டுக்கள் வனைந்து கு.வி.மு.ச.பிரிவு 228(1)(ஆ)-ன் கீழ் எதிரியிடம் குற்றச்சாட்டுக்களை தமிழில் படித்துக்காட்டி விளக்கிக் கூறியபோது எதிரி 21(4) of Mines and Minerals (Development and Regulation) Act, 1957 r/w 379 IPC-ன் கீழான குற்றங்களை மறுத்துரைத்து, தான் குற்றவாளி இல்லை என்று கூறி விசாரணை கோரினார். எனவே, இந்நீதிமன்றத்தால் கு.வி.மு.ச. பிரிவு 231-ன் கீழ் அரசுத் தரப்பு சாட்சியங்களை விசாரணை செய்ய உத்தரவிடப்பட்டது.

**4)** கனிமவள வழக்குகளில் தனிநபர் புகார் பதிவு செய்யப்பட்டு அதனடிப்படையில் ஒரு வழக்கும், குற்ற இறுதி அறிக்கை தாக்கல் செய்யப்பட்டு அதனடிப்படையில் ஒரு வழக்குமாக கோப்பிற்கு எடுக்கப்பட்டிருக்கும் நிலையில் மேற்படி இரு வழக்குகளையும் ஒருசேர நடத்த வேண்டுமென்று மாண்புமிகு சென்னை உயர்நீதிமன்றம் கீழக்கண்ட வழக்கில் தெளிவாக எடுத்துரைத்துள்ளது.

2023(4) CTC 113 : 2023(3) LW 601 : 2023(2) LW (Crl)1: 2023(3) MLJ (Crl) 536 - S.Kumar Vs The District Collector, Kokkirakulam and others – It is held that B. Mines and Mineral (Development and Regulation) Act, 1057 Sections 22 and 23A Compounding of Offence – Jurisdiction of Police – FIR registered for offences under IPC as also MMRD Act – Police have no jurisdiction to compound offences under IPC – Prosecution under IPC and prosecution under MMDR Act are wholly isolated and District and not connected with each other – Compounding of offence under MMDR Act cannot

KANNAYEERAM ARIVOLI
Digitally signed by KANNAYEERAM ARIVOLI
Date: 2026.03.12 17:35:08 +0530

have any hearing on prosecution initiated under IPC – Police personnel has jurisdiction to compound offences under MMDR Act.

**5)** அரசு தரப்பில் அ.சா.1 முதல் அ.சா.3 வரையிலான சாட்சிகளும், அவர்கள் மூலமாக அ.சா.ஆ.1 முதல் அ.சா.ஆ.8 வரையிலான சான்றாவணங்களும், அ.சா.பொ.1 குறியீடு செய்யப்பட்டுள்ளது.

**6) அரசு தரப்பில் விசாரிக்கப்பட்ட சாட்சியங்களின் சுருக்கம் பின்வருமாறு:-**

*i)* அ.சா.1 தனசேகரன் தனது சாட்சியத்தில், கடந்த 2020-ம் ஆண்டில் மானாமதுரை சிப்காட் காவல் நிலையத்தில் 2-ம் நிலை காவலராக பணியாற்றிய போது கடந்த 24.08.2020-ம் தேதி ரோந்து பணிக்காக தான் தங்கள் நிலையத்தைச் சார்ந்த கணேசன் என்ற காவலரும் செய்களத்தூர் பகுதியில் சென்ற போது தங்களுக்கு கிடைத்த ரகசிய தகவலின் படி செய்களத்தூர் சின்னக் கண்மாய் அய்யனார் கோவில் அருகில் மணல் அள்ளுவதாக தகவல் வந்தது என்றும், தாங்கள் இருசக்கர வாகனத்தில் சென்ற போது எதிரே TN 63 L 0067 என்ற எண் கொண்ட டிராக்டரும் அதனுடன் TN 63 L 1883 என்ற பதிவெண்ட கொண்ட டிரெய்லரும் வந்து கொண்டு இருந்தது என்றும், அந்த வண்டியில் சுமார் ஒரு யூனிட் சவடு மண் இருந்ததால் வண்டியை நிறுத்திய போது எதிரி பிரபாகரன் என்பவர் தங்களை கண்டதும் ஓட முயற்சித்தார் என்றும், தாங்கள் அவரை பிடித்து டிராக்டருடன் கூடிய டிரெய்லர் மற்றும் மண்ணுடன் எதிரியையும் மானாமதுரை சிப்காட் காவல் நிலையம் கொண்டு வந்து தான் புகார் கொடுத்ததாகவும், மேற்படி புகார் அ.சா.ஆ.1 என்றும் சாட்சியமளித்துள்ளார்.

*ii)* அ.சா.2 கணேசன் தனது சாட்சியத்தில், கடந்த 24.08.2020-ம் தேதி சிப்காட் காவல் நிலையத்தில் சார்பு ஆய்வாளராக பணிபுரிந்த போது காலை சுமார்

KANNAYEERAM ARIVOLI Digitally signed by KANNAYEERAM ARIVOLI Date: 2026.03.12 17:35:16 +0530

10.00 மணியளவில் சிப்காட் காவல் நிலையத்தில் பணிபுரிந்த 2-ம் நிலை காவலர் தனசேகரன் என்பவர் கொடுத்த புகார் மனுவைப் பெற்று அதனுடன் அவர் ஒப்படைத்த TN 63 L 0067 என்ற எண் கொண்ட டிராக்டரும் அதனுடன் TN 63 L 1883 என்ற பதிவெண்ட கொண்ட டிரெய்லரும் மணலுடன் சம்பந்தப்பட்ட எதிரியை அழைத்து நிலையம் கொண்டு வந்து நிலைய குற்ற எண்.216/2020-ஆக இ.த.ச பிரிவு 379-ன் கீழ் முதல் தகவல் அறிக்கை அ.சா.ஆ.2 பதிவு செய்ததாகவும், மேற்படி முதல் தகவல் அறிக்கையை உரிய நீதிமன்றத்திற்கு அனுப்பி வைத்து மற்ற நகல்களை சம்பந்தப்பட்ட அதிகாரிகளுக்கு அனுப்பி வழக்கின் விசாரணையை துவங்கியதாகவும், அன்றைய தினமே பகல் 11.00 மணியளவில் சம்பவ இடம் சென்று சாட்சிகள் கவியரசு மற்றும் கலைசெல்வம் என்பவர்களின் முன்னிலையில் பார்வை மகஜர் அ.சா.ஆ.3 மற்றும் மாதிரி வரைபடம் அ.சா.ஆ.4 தயார் செய்ததாகவும், கடந்த 24.08.2020ம் தேதி 14.00 மணிக்கு தலைமை காவலர் கணேசன், தனசேகரன் முன்னிலையில் தான் TN 63 L 0067 என்ற எண் கொண்ட டிராக்டர் மற்றும் அதனுடன் இணைந்த TN 63 L 1883 என்ற பதிவெண்ட கொண்ட டிரெய்லரை ஒரு யூனிட் சவடு மணலுடன் கைப்பற்றியதற்கு கைப்பற்றுதல் மகஜர் அ.சா.ஆ.5 தயார் செய்ததாகவும், இவ்வழக்கில் தான் கைப்பற்றிய TN 63 L 0067 என்ற எண் கொண்ட டிராக்டரும் அதனுடன் TN 63 L 1883 என்ற பதிவெண்ட கொண்ட டிரெய்லரும் உரிய படிவம் மூலம் நீதிமன்றத்திற்கு அனுப்பி வைத்ததாகவும், மேற்படி TN 63 L 0067 என்ற எண் கொண்ட டிராக்டரும் அதனுடன் TN 63 L 1883 என்ற பதிவெண்ட கொண்ட டிரெய்லரும் சா.பொ.1 என்றும், மேற்படி படிவம்-91 அ.சா.ஆ.6 என்றும், இவ்வழக்கில் கைப்பற்றப்பட்ட வாகனத்துடன் கூடிய மணலை உரிய

வட்டாச்சியரிடம் ஒப்படைத்ததற்கு பெற்ற ஒப்புகை ரசீது அ.சா.ஆ.7 என்றும், இவ்வழக்கில் எதிரி வண்டியுடன் ஒப்படைக்கப்பட்டதால் அந்த காலகட்டம் கொரோனா காலம் என்பதால் நிலைய ஜாமீனில் எதிரியை பிணையில் விடுவித்ததாகவும், மேலும் இவ்வழக்கில் சாட்சிகளான காவலர் தனசேகரன், தலைமை காவலர் கணேசன், சாட்சிகள் கவியரசு, கலைச்செல்வம் ஆகியோர்களை விசாரித்து வாக்குமூலங்கள் பதிவு செய்து குற்றத்தின் தன்மைக்கேற்ப கடந்த 30.09.2020-ம் தேதி குற்ற இறுதி அறிக்கை தாக்கல் செய்ததாகவும் சாட்சியமளித்துள்ளார்.

*iii)* அ.சா.3 சேது தனது சாட்சியத்தில், கடந்த 01.09.2020-ம் தேதி மானாமதுரை காவல் நிலையத்தில் காவல் ஆய்வாளராக இருந்த போது தனது கட்டுப்பாட்டில் வரும் மானாமதுரை சிப்காட் காவல் நிலைய குற்ற எண்.216/2020 தொடர்புடைய வழக்கில் இதச பிரிவு 379 மற்றும் 21(1) MMDR Act படி வழக்கு பதிவு செய்து வைத்திருந்து புலன் விசாரணை நடைபெற்று வந்த வழக்கில் கடந்த 01.09.2020-ல் மாவட்ட அமர்வு நீதிமன்றத்தில் இவ்வழக்கில் தனிநபர் புகார் அ.சா.ஆ.8 தாக்கல் செய்ததாகவும் சாட்சியமளித்துள்ளார். இத்துடன் அரசு தரப்பு சாட்சிகளின் சாட்சியங்கள் முடிக்கப்பட்டது.

**7)** அரசு தரப்பில் விசாரிக்கப்பட்ட சாட்சிகளின் சாட்சியங்களில் இருந்து எதிரிக்குப் பாதகமாக இருக்கக்கூடிய பகுதிகள் பற்றி எதிரியிடம் கு.வி.மு.ச. பிரிவு 313 (1) (ஆ)-ன் கீழ் தமிழில் விளக்கிக் கூறி வினவிய போது, எதிரி அரசு தரப்பு சாட்சிகளின் சாட்சியங்களில் தனக்குப் பாதகமாக தோன்றக் கூடிய பகுதிகளைப் பொய் என மறுத்துள்ளார். மேலும், தன் தரப்பில் விசாரிக்க சாட்சிகள் இல்லை என்று கூறப்பட்டதை தொடர்ந்து, எதிரி தரப்பு

KANNAYEERAM ARIVOLI
Digitally signed by KANNAYEERAM ARIVOLI
Date: 2026.03.12 17:35:31 +0530

சாட்சியம் முடிக்கப்பட்டது.

**8)** தற்போது இந்நீதிமன்றத்தால் தீர்மானிக்கப்பட வேண்டிய பிரச்சனை என்னவென்றால் சிறப்பு அமர்வு வழக்கு எண்.56/2024-ல் உள்ள எதிரிக்கு எதிரான 379 IPC-ன் கீழான குற்றச்சாட்டு மற்றும் சிறப்பு அமர்வு வழக்கு எண்.57/2024-ல் உள்ள எதிரிக்கு எதிரான 21(4) of Mines and Minerals (Development and Regulation) Act, 1957-ன் கீழான குற்றச்சாட்டு அரசு தரப்பால் தகுநிலை ஐயப்பாட்டிற்கு அப்பாற்பட்டு நிரூபணம் செய்யப்பட்டுள்ளதா? இல்லையா? என்பதேயாகும்.

<u>பிரச்சனைக்குரிய தீர்வு:-</u>

**9)** இவ்வழக்கில், கடந்த 24.08.2020-ம் தேதி காலை 9.00 மணிக்கு சாட்சி-1 தனசேகர் மற்றும தலைமைக் காவலரான சாட்சி-2 கணேசன் என்பவரும் Hello Police-48 அலுவலாக சிப்காட் காவல் சரகம் பகுதிகளில் ரோந்து சுற்றி வந்தபோது செய்களத்தூர் சின்னக்கண்மாய் அய்யனார் கோவில் அருகே TN 63 L 0067 என்ற பதிவெண் கொண்ட டிராக்டரில் அதனுடன் இணைந்த TN 63 L 1883 என்ற பதிவெண் கொண்ட டிரெய்லரில் எதிரி எவ்வித அரசு அனுமதியுமின்றி சுயலாப நோக்கம் கருதி திருட்டுத்தனமாக சுமார் ஒரு யூனிட் சவடு மண்ணை அள்ளி வந்துள்ளார் என்பதாக எதிரி மீது 21(4) of Mines and Minerals (Development and Regulation) Act, 1957 r/w 379 IPC-ன் கீழ் குற்றச்சாட்டுக்கள் வனையப்பட்டுள்ளது.

**10)** எதிரி மீது வனையப்பட்டுள்ள குற்றச்சாட்டுக்களை நிரூபணம் செய்யும் வகையில் அரசு தரப்பில் அ.சா.1 முதல் அ.சா.3 வரையிலான சாட்சிகள் விசாரிக்கப்பட்டு அ.சா.ஆ.1 முதல் அ.சா.ஆ.8 வரையிலான ஆவணங்களும்

KANNAYEERAM ARIVOLI
Digitally signed by KANNAYEERAM ARIVOLI
Date: 2026.03.12 17:35:42 +0530

அ.சா.பொ.1 குறியீடு செய்யப்பட்டுள்ளன. இவ்வழக்கில் விசாரிக்கப்பட்டுள்ள சாட்சிகளில் அ.சா.1 தனசேகர், 2-ம் நிலை காவலர் சம்பவம் பற்றியும், எதிரி மற்றும் சொத்துக்களுடன் நிலையம் வந்து புகார் கொடுத்தது பற்றி கூறும் சாட்சி, அ.சா.2 கணேசன் அ.சா.1 கொடுத்த புகாரைப் பெற்று முதல் தகவல் அறிக்கை பதிவு செய்து, சம்பவ இடம் சென்று பார்வை மகஜர் மற்றும் மாதிரி வரைபடம் தயார் செய்து, சாட்சிகளை விசாரணை செய்து வாக்குமூலம் பதிவு செய்து, சம்பவத்திற்கு எதிரியால் பயன்படுத்தப்பட்ட வாகனத்தை படிவம்-91 மூலம் கைப்பற்றி உரிய நீதிமன்றத்திற்கு அனுப்பி வைத்து, வழக்கின் விசாரணை முடித்து எதிரி மீது குற்ற இறுதி அறிக்கை தாக்கல் செய்த சார்பு ஆய்வாளர் ஆவார். அ.சா.3 சேது தனிநபர் புகார் தாக்கல் செய்த காவல் ஆய்வாளர் ஆவார்.

**11)** அரசு தரப்பில் ஆஜரான கற்றறிந்த வழக்கறிஞர் அவர்கள் இவ்வழக்கில் எதிரி மீதான குற்றச்சாட்டுக்களை நிரூபணம் செய்யும் வகையில் அ.சா.1 முதல் அ.சா.3 வரையிலான சாட்சிகள் விசாரிக்கப்பட்டு அ.சா.ஆ.1 முதல் அ.சா.ஆ.8 வரையிலான சான்றாவணங்களும் மற்றும் அ.சா.பொ.1 குறியீடு செய்யப்பட்டுள்ளது என்றும், இவ்வழக்கில் விசாரிக்கப்பட்டுள்ள சாட்சிகள் அனைவரும் 24.08.2020-ம் தேதி காலை 9.00 மணிக்கு சாட்சி-1 தனசேகர் மற்றும் தலைமைக் காவலரான சாட்சி-2 கணேசன் என்பவரும் Hello Police-48 அலுவலாக சிப்காட் காவல் சரகம் பகுதிகளில் ரோந்து சுற்றி வந்தபோது செய்களத்தூர் சின்னக்கண்மாய் அய்யனார் கோவில் அருகே TN 63 L 0067 என்ற பதிவெண் கொண்ட டிராக்டரில் அதனுடன் இணைந்த TN 63 L 1883 என்ற பதிவெண் கொண்ட டிரெய்லரில் எதிரி எவ்வித அரசு அனுமதியுமின்றி சுயலாப நோக்கம் கருதி திருட்டுத்தனமாக சுமார் ஒரு யூனிட் சவடு மண்ணை அள்ளி வந்துள்ளார் என்பது

நிரூபணம் செய்யப்பட்டுள்ளது என்றும், எனவே எதிரிக்கு தக்க தண்டனை வழங்க வேண்டுமென்று வாதிட்டார்.

**12)** எதிரி தரப்பில் ஆஜரான கற்றறிந்த வழக்கறிஞர் அவர்கள் சம்பவ இடத்தின் சர்வே எண், நீள, அகலம் மற்றும் சேதமதிப்பு பற்றி புகாரில் குறிப்பிட்டு சொல்லப்படவில்லை என்றும், புகாரிலும், போலீசாரிடம் கொடுத்த வாக்கு மூலத்திலும் முரண்பட்டு சாட்சியமளித்துள்ளார் என்றும், அ.சா.1-ஆன சம்பவ சாட்சி எதிரியால் மேற்படி டிராக்டருடன் கூடிய டிரெய்லரில் அள்ளிக் கொண்டு வந்த சவடு மணலின் மதிப்பு என்ன என்பது பற்றி ஆவணங்கள் எதுவும் தாக்கல் செய்யப்படவில்லை என்றும், மேலும் அ.சா.1 கொடுத்த புகாரிலும், முதல் தகவல் அறிக்கை மற்றும் தனிநபர் புகாரிலும் டிரெய்லரின் பதிவு எண் TN 63 L 1883 என்பதற்கு பதிலாக TN 63 L 8883 என்று தவறுதலாக குறிப்பிடப்பட்டுள்ளது என்றும், அதிலும் குறிப்பாக கைப்பற்றுதல் மகஜர் மற்றும் படிவம்-91-ல் டிரெய்லரின் பதிவு எண.TN 63 L 8883 எழுதப்பட்டு பின்பு டிரெய்லரின் பதிவு எண் TN 63 L 1883 திருத்தம் செய்யப்பட்டுள்ளது என்றும், மேலும் இவ்வழக்கை பொறுத்து தனிப்பட்ட சாட்சிகள் யாரும் விசாரிக்கப்படவில்லை என்றும், இவ்வழக்கு சம்பவத்திற்கு பயன்படுத்தப்பட்ட சான்று பொருட்களான மண் வெட்டி மற்றும் சாந்துசட்டி கைப்பற்றப்படவில்லை என்றும், எனவே எதிரிக்கும், இவ்வழக்கு சம்பவத்திற்கும் எவ்வித சம்பந்தமும் இல்லை என்றும், புள்ளிவிபர கணக்கிற்காக மட்டுமே எதிரி மீது இவ்வழக்கு பதிவு செய்யப்பட்டுள்ளது என்றும், அரசு அனுமதியில்லாமல் எதிரி சவடு மணலை டிராக்டருடன் கூடிய டிரெய்லரில் அள்ளிக் கொண்டு வந்தார் என்பது பற்றியும் அரசு தரப்பில் தகுந்த சாட்சிகள் மற்றும் சான்றாவணங்கள் மூலம் நிரூபணம் செய்யப்படவில்லை என்றும், எனவே எதிரி மீது சுமத்தப்பட்டுள்ள

KANNAYEERAM ARIVOLI
Digitally signed by KANNAYEERAM ARIVOLI
Date: 2026.03.12 17:35:57 +0530

குற்றச்சாட்டுக்கள் அரசு தரப்பில் தகுந்த சாட்சிகளின் சாட்சியங்கள் மூலம் நிரூபணம் செய்யப்படவில்லை என்றும், எனவே இவ்வழக்கில் எழுந்துள்ள சந்தேகத்தின் பலனை எதிரிக்கு வழங்கி எதிரியை இவ்வழக்கு குற்றச்சாட்டுகளிலிருந்து விடுதலை செய்ய வேண்டியது அவசியம் என்று வாதிட்டார்.

**13)** இவ்வழக்கில் எதிரி தரப்பில் அ.சா.1-ஐ குறுக்கு விசாரணை செய்யும் போது அவர் தனது குறுக்கு விசாரணையில் தான் கொடுத்த புகாரில் மணல் அள்ளப்பட்ட இடத்தின் சர்வே எண்ணோ, நீள அகலங்களோ சேதம் மதிப்போ குறிப்பிட்டு புகார் கொடுக்கவில்லை என்றும், சம்பவ இடத்தை நேரில் சென்று பார்த்து அதன்பின் புகார் கொடுத்ததாக தான் தன் முதல் விசாரணையில் சொல்லவில்லை என்றும், அதேபோல் வழக்கில் கைப்பற்றிய வாகனத்தை சம்பவ இடத்தில் இருந்து காவல் நிலையத்திற்கு யார் கொண்டு வந்தது என்று சொல்லவில்லை என்றும் ஒப்புக்கொண்டு சாட்சியமளித்துள்ளார். அதேபோல் அ.சா.2 தனது குறுக்கு விசாரணையில் இவ்வழக்கின் சம்பவ இடம் குறித்து நேரடியாக தனக்கு தெரியாது என்றும், தன்னிடம் புகார் கொடுத்த காவலர் சம்பவம் நடந்ததாக சொல்லப்படும் இடத்தின் சர்வே எண் மற்றும் நீள அகலங்கள் குறித்து குறிப்பிட்டு புகார் வழங்கவில்லை என்றும், இவ்வழக்கில் வழக்கு சம்மந்தப்பட்ட இடத்தின் கிராம நிர்வாக அலுவலரையோ, உதவியாளரையோ சாட்சியாக விசாரிக்கவில்லை என்றும், தான் தயாரித்த பார்வை மகஜர் மற்றும் மாதிரி வரைபடத்தில் சம்பவ இடத்தின் சர்வே எண் குறித்து சொல்லப்படவில்லை என்றும், இவ்வழக்கு சம்பவம் குறித்து தனியாக கனிம வளத்துறைக்கு கடிதம் எதுவும் கொடுக்கவில்லை என்றும், டிராக்டர் மற்றும் டிரெய்லரை கைப்பற்றிய

மகஜரில் எதிரியிடமிருந்து கைப்பற்றியதாக என்ற வாசகம் இல்லை என்றும் ஒப்புக்கொண்டு சாட்சியமளித்துள்ளார். இந்நிலையில் அ.சா.3 காவல் ஆய்வாளர் தனது குறுக்கு விசாரணையில் இவ்வழக்கு தொடர்பாக தான் கனிமவள அதிகாரிகளிடம் தனியாக தகவல் சொல்லவில்லை என்றும் ஒப்புக்கொண்டு சாட்சியமளித்துள்ளார்.

**14)** மேலும் இவ்வழக்கின் புகார்தாரரும், சாட்சி-1-ஆன சிப்காட் 2-ம் நிலை காவலர் தனசேகரனும் மற்றும் தலைமைக் காவலரான சாட்சி-2 கணேசன் என்பவரும் Hello Police-48 அலுவலாக சிப்காட் காவல் சரகம் பகுதிகளில் ரோந்து சுற்றி வந்தபோது செய்களத்தூர் சின்னக்கண்மாய் அய்யனார் கோவில் அருகே TN 63 L 0067 என்ற பதிவெண் கொண்ட டிராக்டரில் அதனுடன் இணைந்த TN 63 L 1883 என்ற பதிவெண் கொண்ட டிரெய்லரில் எதிரி எவ்வித அரசு அனுமதியுமின்றி சுயலாப நோக்கம் கருதி திருட்டுத்தனமாக சுமார் ஒரு யூனிட் சவடு மண்ணை அள்ளி வந்துள்ளார் என்பதற்கும், மேற்படி எதிரியால் TN 63 L 0067 என்ற பதிவெண் கொண்ட டிராக்டர் அதனுடன் இணைந்த TN 63 L 1883 என்ற பதிவெண் கொண்ட டிரெய்லரில் அள்ளப்பட்டதாக சொல்லப்படும் ஒரு யூனிட் சவடு மண் எந்தப் புல எண்ணில், எந்தப் பகுதிகளில் அள்ளப்பட்டது என்ற விவரம் குறிப்பிட்டு சொல்லப்படவில்லை என்பதற்கும் அரசு தரப்பில் யாதொரு ஆவணமும் முன்னிலைப்படுத்தப்படவில்லை.

**15)** இந்நிலையில், இவ்வழக்கில் சொல்லப்பட்டுள்ளதுபோல் அரசு அனுமதியில்லாமல் எதிரி ஒரு யூனிட் சவடு மணலை TN 63 L 0067 என்ற பதிவெண் கொண்ட டிராக்டர் அதனுடன் இணைந்த TN 63 L 1883 என்ற பதிவெண் கொண்ட டிரெய்லரில் அள்ளி வந்தார் என்பது குறித்து சந்தேகம் எழுகிறது.

KANNAYEERAM ARIVOLI
Digitally signed by KANNAYEERAM ARIVOLI
Date: 2026.03.12 17:36:14 +0530

12.03.2026 முதன்மை அமர்வு நீதிபதி, சிவகங்கை

குறிப்பாக இவ்வழக்கில் தனிப்பட்ட சாட்சிகள் யாரும் சாட்சியாக விசாரிக்கப் படவில்லை என்பதையும் அறிய முடிகிறது. இந்நிலையில், இவ்வழக்கிற்கும் எதிரிக்கும் எவ்வித சம்மந்தமும் இல்லை என்றும், புள்ளி விபர கணக்கிற்காக எதிரி மீது பொய்யாக இவ்வழக்கு பதிவு செய்யப்பட்டுள்ளது என்று கூறும் எதிரி தரப்பு கூற்று எளிதில் நிராகரிப்பதற்கில்லை.

**16)** எனவே, மேலே விவாதிக்கப்பட்டுள்ள காரணங்களின் அடிப்படையில் அரசு தரப்பில் விசாரிக்கப்பட்ட சாட்சிகளின் வாய்மொழி சாட்சியங்கள் மற்றும் சான்றாவணங்களை ஒருங்கிணைந்து சீர்தூக்கி பார்க்கும்போது எதிரி மீது வனையப்பட்டுள்ள குற்றச்சாட்டுக்கள் தகுந்த சாட்சிகள் மற்றும் சான்றாவணங்கள் மூலம் சந்தேகத்திற்கு இடமில்லாமல் நிரூபணம் செய்யப்படவில்லை என்று தீர்மானித்து அதனடிப்படையில் இவ்வழக்கில் எழுந்துள்ள சந்தேகத்தின் பலனை எதிரிக்கு வழங்கி எதிரியை விடுதலை செய்ய வேண்டியது அவசியம் என்பதாகவே இந்நீதிமன்றம் தீர்மானிக்கின்றது.

**சிறப்பு அமர்வு வழக்கு எண்:56/2024:**

***முடிவில்,*** எதிரி இதச பிரிவு 379-ன் கீழ் குற்றவாளி இல்லை என தீர்மானித்து கு.வி.மு.ச. பிரிவு 235(1)-ன் கீழ் விடுதலை செய்து தீர்ப்பளிக்கப்படுகிறது.

**சிறப்பு அமர்வு வழக்கு எண்:57/2024:**

***முடிவில்,*** எதிரி 21(4) of Mines and Minerals (Development and Regulation) Act, 1957-ன் கீழ் குற்றவாளிகள் இல்லை என தீர்மானித்து கு.வி.மு.ச. பிரிவு 235(1)-ன் கீழ் விடுதலை செய்து தீர்ப்பளிக்கப்படுகிறது.

இவ்வழக்கில் பி.ஆர்.எண்.54/2020-ல் அ.சா.பொ.1-ஆக குறியீடு

KANNAYEERAM ARIVOLI
Digitally signed by KANNAYEERAM ARIVOLI
Date: 2026.03.12 17:36:20 +0530

செய்யப்பட்டுள்ள TN 63 L 0067 என்ற பதிவெண் கொண்ட டிராக்டர் அதனுடன் இணைந்த TN 63 L 1883 என்ற பதிவெண் கொண்ட டிரெய்லர் இந்நீதிமன்ற குற்றவியல் பல்வகை மனு எண்.2277/2020-ல், நாள்:24.09.2020 அன்று பிறப்பித்த உத்தரவுப்படி அதன் உரிமையாளரான எதிரி பிரபாகரன், த/பெ.ஆறுமுகம் என்பவர் உரிய ஆவணங்களின் பேரில் இடைக்காலப் பொறுப்பில் பெற்றுச் சென்றுவிட்டதால், மேல்முறையீட்டு காலத்திற்குப் பிறகோ, மேல்முறையீடு இருப்பின் அதன் முடிவிற்குப் பின்னரோ மேற்படி வாகனத்தை அதன் உரிமையாளரிடம் நிரந்தரமாக ஒப்படைக்க வேண்டுமென்றும், இவ்வழக்கு குற்றச்சாட்டு குறித்து வைப்புத் தொகை ஏதேனும் செலுத்தியிருந்தால் உரிய நீதிமன்றத்தில் மனு செய்து திரும்ப பெற்றுக் கொள்ளவும், எதிரி எழுதிக் கொடுத்த பிணை முறிகள் ரத்து செய்யப்பட வேண்டுமென்றும் உத்தரவிடப்படுகிறது.

இந்தத் தீர்ப்புரை என்னால் சுருக்கெழுத்து தட்டச்சருக்கு நேரில் சொல்லப்பட்டு, பின்பு அவரால் கணினியில் தட்டச்சு செய்யப்பட்டு, அதன்பின்பு என்னால் பிழை திருத்தப்பட்டு இன்று 2026-ம் ஆண்டு மார்ச் திங்கள் 12-ம் நாள் இத்திறந்த நீதிமன்றத்தில் அவையறிய பகரப்பட்டது.

KANNAYEERAM ARIVOLI

Digitally signed by KANNAYEERAM ARIVOLI
Date: 2026.03.12 17:36:29 +05'30'

முதன்மை அமர்வு நீதிபதி,
சிவகங்கை.

**<u>அரசு தரப்பு சாட்சிகள்:-</u>**
**<u>திருவாளர்கள்.</u>**

| அரசு தரப்பு சாட்சிகளின் வரிசை. | சாட்சிகளின் பெயர் | சாட்சிகளின் பற்றிய விபரம் |
|---|---|---|
| அ.சா.1 | தனசேகர்,<br>2-ம் நிலை காவலர். | சம்பவம் பற்றியும், புகார் கொடுத்தது பற்றியும் கூறும் சாட்சி. |
| அ.சா.2 | கணேசன்,<br>சார்பு ஆய்வாளர். | சம்பவம் பற்றியும், முதல் தகவல் அறிக்கை பதிவு, மாதிரி வரைபடம், பார்வை மகஜர் |

| | | |
|---|---|---|
| | | தயார் செய்தது, சொத்துக்களை கைப்பற்றியது, சாட்சிகளிடம் வாக்குமூலம் பதிவு செய்தது, குற்றப்பத்திரிக்கை தாக்கல் செய்தது பற்றி கூறும் சாட்சி. |
| அ.சா.3 | சேது<br>காவல் ஆய்வாளர். | தனிநபர் புகார் தாக்கல் செய்தது பற்றி கூறும் சாட்சி. |

**அரசு தரப்பு சான்றாவணங்கள்:-**

| சான்றாவணங்களின் வரிசை. | சான்றாவணங்களின் விபரம். | சான்றாவணங்கள் குறியீடு செய்யப்பட்டவர்களின் விபரம். |
|---|---|---|
| அ.சா.ஆ.1 | புகார். | அ.சா.1 |
| அ.சா.ஆ.2 | முதல் தகவல் அறிக்கை. | அ.சா.2 |
| அ.சா.ஆ.3 | பார்வை மகஜர். | அ.சா.2 |
| அ.சா.ஆ.4 | மாதிரி வரைபடம். | அ.சா.2 |
| அ.சா.ஆ.5 | அத்தாட்சி | அ.சா.2 |
| அ.சா.ஆ.6 | படிவம்-91 | அ.சா.2 |
| அ.சா.ஆ.7 | ஒப்புகை ரசீது. | அ.சா.2 |
| அ.சா.ஆ.8 | தனிநபர் புகார் (200 Cr.P.C.). | அ.சா.3 |

**அரசு தரப்பு சான்று பொருள்:-**

| சான்று பொருட்களின் வரிசை | சான்று பொருட்களின் விபரம். | சான்று பொருட்கள் குறியீடு செய்யப்பட்டவர்களின் விபரம். |
|---|---|---|
| அ.சா.பொ.1 | TN 63 L 0067 என்ற பதிவெண் கொண்ட டிராக்டர் அதனுடன் இணைந்த TN 63 L 1883 என்ற பதிவெண் கொண்ட டிரெய்லர். | அ.சா.1 |

**எதிரி தரப்பில் சாட்சி மற்றும் சான்றாவணங்கள்:-** இல்லை.

KANNAYEERAM ARIVOLI
Digitally signed by KANNAYEERAM ARIVOLI
Date: 2026.03.12 17:36:45 +0530

முதன்மை அமர்வு நீதிபதி,
சிவகங்கை.

முதன்மை அமர்வு நீதிமன்றம்,
சிவகங்கை
சிறப்பு அமர்வு வழக்கு
எண்கள்.56/2024
மற்றும்
57/2024
பொதுவான வரைவு - சீரான /
தீர்ப்புரை
நாள்: 12.03.2026

12.03.2026 முதன்மை அமர்வு நீதிபதி, சிவகங்கை